84217	கல்விசாரா படிகள்	**2,420,812**	**-**
84218	கல்விசாரா சீராகக படிகள்	**143,786**	**-**
84220	கல்விசாரா வா. சே.கொ	**2,550,457**	**-**
84221	கல்விசரா பதவியணி நலன்புரி	**175,859**	**-**
84249	அமைய படிகள்	**1,198,165**	**-**
90275	முத்திரை வரி	**29,600**	**-**
Grnt	மானியங்கள்		**17,801,629**
		1,069,904,691	**1,069,904,691**

ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை 2019

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. சீஎல்பி/கேடீ/ஜே/பிஜீஜஎஸ்/2020/08 திகதி: 2020 யூன் 22

பணிப்பாளர்
விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம்

விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

மேற்குறித்த அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

ஒப்பம் டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பிரதிகள் 01 செயலாளர்: உயர் கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சு
02 செயலாளர் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு
03 தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
04 உப வேந்தர் பேராதனைப் பல்கலைக்கழகம்

சீஎல்பி/கேடீ/ஜே/பிஜீஐஎஸ்/2020/18 2020 யூன் 22

பணிப்பாளர்

விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகம்

விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க காலக்கிரமத்தில் எனது அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிறுவகத்தினால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிறுவகத்தின் பாடநெறிக் கட்டணங்களை கணக்கீடு செய்வதற்குரிய சரியான கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங் காணப்படாதிருந்ததுடன் அதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) மீளாய்வாண்டில் தவணைப் பணம் அறவிடப்படாத உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 112,988 பெறுமதியான இடர்கடன் மீதி மற்றும் கணனி கடன் மீதி என்பன நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன

(இ) 2008 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ரூபா 50,338,160 தொகையை அறவிடுவதின் போக்கு நிச்சயமற்ற நிலைமையில் இருக்கும் போது நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததால் நிறுவகத்தின் சொத்துக்கள் சரியாக நிரூபணமாகவில்லையென்பது அவதானிக்கப்பட்டது

(ஈ நிறுவகம் மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மானியம் பெறுகை ரூபா 138,594 மற்றும் ரூபா 140,717 ஆன ஆராய்ச்சி மானியம் கொடுப்பனவுகள் குறைத்து காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தன

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்கொன்றாகும்.

நிறுவகம் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாகபோதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புடைய தரப்பினர் தெரியப்படுத்தப்பட்டனர்.

2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்காக தேவையான சகல தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையின் போது வெளிப்படுதப்பட்ட வகையில் உரிய நிதி அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணப்பட்டிருப்பதாகவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன எனவும்.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது எனவும்

பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகத்தின் ஆளுகை சபை உறுப்பினர் நிறுவகத்துடன் தொடர்புபட்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் பொதுவான வியாபார நிலைமை அல்லாமல் தொடர்புபட்டுள்ளதாக
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் இணங்கியொழுகாதுள்ளமையை

சட்டங்கள், விதிகள்/ ஏற்பாடுகளுடன் தொடர்பு	**அவதானிப்புக்கள்**
(அ) 2019 யூலை 30 ஆந் திகதிய 4/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம்	
(I) (iii) ஆம் பிரிவு	நிலையான வைப்பு பதிவேடு சுற்றறிக்கைக்கு இணங்க பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(II) (v) ஆம் பிரிவு	நிறுவகம 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை 33 நிலையான வைப்புக்கள் பேணிச்செல்லப்பட்டு வந்ததுடன் இவ்வைப்புக்கள் முதிர்வடைந்தவுடன்

சுற்றறிக்கையின் பிரகாரம் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து கூறுவிலை கோரி நலன்கள் கூடிய நிறுவனத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நிறுவகம் அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருந்ததாக

அதிகாரங்கள், இலக்குகள், பணிகள்	**அவதானிப்புக்கள்**
(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2015 திசெம்பர் மாதத்தின் போது விநியோகிக்கப்பட்ட இலங்கை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் பட்டப்படிப்பு பாடநெறிகளை மீளாய்வு செய்வது தொடர்பான கைநூலின் 7 ஆவது நியதி	i பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்காக விடைப்பத்திரங்களை இரண்டாவது தடவை சரி பிழை பார்க்கும் உள்ளக ரீதியாக அறிமுகப்படுத்த வேண்டியதுடன் அது பேரவையாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
	ii நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள், திட்டமிடல், வினாப் பத்திரங்களை தயாரித்தல், அவற்றை மேம்படுத்துதல், சரி பிழை பார்த்தல், தரப்படுத்தல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் மற்றும் நியமங்கள் என்பவற்றை தயாரித்து பேரவையினதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.
	iii நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்குரியதாக நடாத்தப்படும் விடைத்தாள் மதிப்பீட்டிற்காக புள்ளியிடல் நடைமுறையொன்று (Marking scheme) தயாரிக்க நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	2015 ஏப்ரல் 09 ஆந் திகதிய 914 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பதவியணியின் ஒழுக்காற்று கல்வி பொறுப்பு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 5 ஆம் பிரிவு	பதவியணியினர் மற்றும் மாணவர்களுக்கு இடையே இருதரப்பு தொடர்பினை வெளிப்படுத்துவதற்கு அல்லது அதன் மூலம் தரக் கட்டுப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய நிலைமைகளை தவிர்ப்பது தொடர்பாக போதியளவு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கீழ காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர நிறுவகத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்கள் விதிகளுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட 11 பட்டப்பின் பாடநெறிகளுக்காக 139 வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக ரூபா 18,519,579 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அவ்விரிவுரையாளர்களின் சேவை முறையாக பெற்றுக் கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக மாணவர்களிடமிருந்து மதிப்பீட்டு நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை.

(ஆ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குரிய விடைப்பத்திரங்களை மதிப்பிடுவதற்காக மதிப்பீட்டுக் குழுவொன்று (Exam Evaluation Panel) நியமிப்பதற்கும் பரீட்சிக்கப்பட்ட விடைப்பத்திரங்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது 11 பதவிகளில் 15 உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்களும் 03 பதவிகளில் 07 உத்தியோகத்தர்கள் மிகையாகவும் காணப்பட்டனர். நிறுவகத்தில் காணப்படும் வெற்றிடமான பதவிகளை விரைவில் நிரப்புவதற்கும் தேவைப்பாட்டின் பிரகார மிகை பதவிகளுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் அல்லது அந்த உத்தியோகத்தர்களை ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு, பதவியணி அங்கீகரிக்கப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை

(ஈ) ஒரு வங்கியில் 24 நிலையான வைப்புக்கள் பேணிச்செல்லப்படுவதுடன் நிறுவனத்தின் தேவைப்பாட்டிற்கு ஈடாகும் வகையில் வைப்புச் சான்றிதழ்களின் அளவினைகக் குறைந்த நிதி முறைகேடுகள் இடம்பெறுவதை குறைப்பது தொடர்பில் முகாமைத்துவும் கவனம் செலுத்தயிருக்கவில்லை.

(உ) நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக சுத்திகரிக்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக திறந்த விலை கோரும் போது முறையாக கருத்திற் கொள்ளாமலும் கவனம் செலுத்தாமலும் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக இரண்டு சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரத்தை மேற்கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 49,335 தொகை சிக்கனமற்ற செலவினமாக இருந்தது.

(ஊ) 2019 ஆம் ஆண்டின் இறுதி வரை நிறுவகத்திற்கு 04 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்த போதும் ஒரு சாரதி மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால் நிறுவகத்திற்கு சொந்தமான 03 வாகனங்கள் எப்போதும் குறைப்பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டதால் நாளாந்த செயற்பாடுகளுக்கு அதிகளவில் தடையொன்று உருவாகியிருந்தது.

(எ) நிறுவகத்திற்கு சொந்தமான 4 வாகனங்களின் எரிபொருள் எரிவினை பரீட்சிப்பதற்காக மீளாய்வாண்டில் இலங்கை போக்குவரத்து சபைக்கு ரூபா 10,000 கொடுப்பனவு செய்து பரீட்சிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சாரதிகளால் அப்பரிசோதனையில் அங்கீகரிக்கப்பட்ட விகிதத்தை விட வேறொரு விகிதமொன்றின் கீழ் நாளந்த ஓட்டக் குறிப்புக்களில் எரிபொருள் எரிவு குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டில் எவ்வித கொடுக்கல் வாங்கலொன்றும் மேற்கொள்ளப் படாதிருந்த 03 ஆராய்ச்சி கணக்குகளுக்குரிய ஆண்டின் இறுதியிலான மீதி ரூபா 227,714 ஆக இருந்ததுடன் ஆராய்ச்சி செயற்பாடுகளை பூர்த்தி செய்த மீதிகளை தீர்வு செய்வதற்கு அல்லது ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2019 ஆம் ஆண்டின் போது ஆராய்ச்சி மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 562,027 பெறுமதியான 23 உபகரணங்கள் முறையாக பொருளிர்பு பதிவேட்டில் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஒ) 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 20 பாதுகாப்பு கெமறாக்களை ஸ்தாபிப்பதற்கு ரூபா 813,649 செலவிடப்பட்டிருந்த போதும் இத்தரவுகளின் களஞ்சியப்படுத்தக்கூடிய காலஎல்லை 21 நாட்களுக்கு குறைவான காலமாக இருந்தது

(ஓள) நிறுவகம் 2018 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்விற்காக களஞ்சியப் பொறுப்பாளர் உட்பட 06 உத்தியோகத்தர்கள் கணிப்பீட்டு சபையாக பரிசோதனை

அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் பொருட் பதிவேடுகளின் பிரகாரம் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஃ) நிறுவகத்தினால் 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட குறுங்கால பாடநெறிகள் / செயலமர்வுகள் தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது 03 பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 640,000 ஆன நிலுவை பாடநெறிக் கட்டணங்களை அறவிடாமல் அப்பாடநெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன

(க்) விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் ஆராய்ச்சி மற்றும் புலமைப் பரிசில் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியத்திலிருந்து மீளாய்வாண்டில் எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் ஆண்டின் இறுதி வரையிலும் நிதியத்தில் ரூபா 8,038,458 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(க) மீளாய்வாண்டின் இறுதியில் 05 மாதங்கள் முதல் 08 ஆண்டு காலம் கடந்த ரூபா 98,962 ஆன வாகன வாடகை வருமானத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்த கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணமான ரூபா 15,428,800 தொகையில் மீளாய்வாண்டில் எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தணிக்கை அவதானிப்புகளுக்கு பிஜிஜஎஸ் பதில்

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் இறுதி கணக்காய்வு அறிக்கைக்காக வழங்கப்பட்ட பதில்

1. நிதிக்கூற்றுக்கள்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 1.4.1 (b) இன் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நடப்பாண்டிற்குரிய பாடநெறி வருமானம் மாத்தரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு பாடநெறி வருமானத் தலைப்பின் கீழ் செயலாற்றல் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நடப்பாண்டில் கிடைத்த சீராக்கமும் (differed income) நடப்பாண்டிற்குரிய நப்பாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நடப்பாண்டிற்கு கிடைக்காத வருமானத்திற்காக தேவையான சீராக்கமும் பாடநெறி வருமானத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது. எவ்வாறு எதிர்காலத்தில் உரிய கணக்கீட்டு கொள்கை தெளிவாக நிதி அறிக்கைகளில் வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்..

(ஆ) கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ரூபா 99,988 ஆன இடர் கடன் மதி மற்றும் ரூபா 13,000 ஆன கணனி கடன் என்பன வேலை இடை நிறுத்தத்திற்கு உள்ளாகிய சிரேஷ்ட உதவி நிதியாளர் மஹேஷ் இத்தவலவிற்கு உரியதாகும். அவரின் பல்கலக்கழக சேமலாப நிதியம் இதுவரை விடுவிக்கப்படாமையால் எதிர்வரும் காலத்தில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(இ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 1.2.6 இன் பிரகாரம் முறை கேட்டிற்கு உட்பட்ட ரூபா 50,338,160.18 ஆன பணத்தை அறவிடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கான வழக்கு தொடரும் செயற்பாடுகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அரச கணக்காய்வுப் இறுதி தடயவியல் கணக்காய்வு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி குற்றச்சாட்டுகளுக்கு உட்படுத்தப்பட்ட முன்னாள் சிரேஷ்ட உதவி நிதியாளர் மஹேஷ் இத்தவல அவர்களால் அப்பணத்தை மோசடியாக பெற்றுக் கொண்டுள்ளதாக சான்றுகளுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்நிறுவனத்தில் இடம் பெற்ற நிதி நட்டத்திற்கு பொறுப்புக் கூற வேணுடிய தரப்பினரான மக்கள் வங்கியும் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் பிரகாரம் இந்நட்டத்தை அறவிடுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக நம்பிக்கையான எதிர்பார்ப்பொன்று எம்மிடம் உள்ளதாக நம்பிக்கை வைக்க முடியும் என்பதால் அத்தொகை நடைமுறையல்லாத சொத்தொன்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமை சரியானதாகும்.

(ஈ) கணக்காய்வின போது சுட்டிக் காட்டப்பட்டுள்ள வேறுபாட்டுடன் இணங்கின்றோம்.

2. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) (i) எம்மால் 2019 ஆம் ஆண்டில் பேணிச் செல்லப்பட்ட நிலையான வைப்பு பதிவேடு சுற்றறிக்கைக்கு இணங்க இல்லா விட்டாலும் அதிலுள்ள தகவல்கள் அனைத்தையும் எம்மால் பேணிச்சென்ற நிலையான சொத்துப் பதிவேட்டில் பேணிச் செல்லப்பட்ட நிலையான வைப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டிலிருந்து 4/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் வைப்பு பதிவேடு பேணிச்செல்லப்படுகின்றது.

(ii) நிலையான வைப்புக்கள் முதிர்வு அடையும் போது அரச வங்கிகளிலிருந்து கூறுவிலை கோரி முதலீடு செய்வதற்கு உரிய உள்ளக கணக்காய்வுச் சுற்றறிக்கை 04/2019 சுற்றறிக்கை 2020 யூலை இறுதிப் பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டமையால் 2020 ஆம் ஆண்டில் இப் பரிந்துரை செயற்படுத்தப்படுகின்றது.

அதிகாரங்கள், இலக்குகள் பணிகள்

(அ) (i) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் உயர் கல்வித் துறைக்கு விசேடமான பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை நடாத்திச் செல்கின்றது. அவ்வாறே உரிய திகதிகளில் பாடநெறிகளை நடாத்தப்படா விட்டால் அடுத்த ஆண்டிற்காக மாணவர்களை சேர்த்துக் கொள்வது சிரரமாகும்.

எமது நிறுவகத்திற்கு முழுநேர விரிவுரையாளர்கள் இரண்டு பேர் மாத்திரம் இருப்பதால் விடைத் தாள் மதிப்பீடு செய்தல் சிக்கலாக இருப்பதுடன் அதற்காக எமது நிறுவகத்திற்கு வசதிகள் வழங்கப்பட வேண்டும். இலங்கையில் பல பாடங்களுக்கு சிறந்த விரிவுரையாளர்கள் மிகக் குறைவு. சில பாடங்களில் விடைத்தாள்களை இரண்டாவது முறையாக சரிபார்க்க கடினமாக உள்ளது. ஏனெனில் பாடநெறிகள் சரியான நேரத்தில் முடிக்கப்பட வேண்டும் மற்றும் பொருள் தொடர்பான நிபுணர்கள் பற்றாக்குறை. இருப்பினும், ஏதேனும் சிக்கலான சந்தர்ப்பங்களில் விடைத் தாள்கள் இரண்டாவது முறையாக சரிபார்க்கப்படுகின்றன, நாங்கள் எப்போதும் அவ்வாறு செய்ய தயாராக இருக்கிறோம். இருப்பினும், கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்ட பிரச்சினைகள் குறித்து நான் தொடர்ந்து விசேட கவனம் செலுத்த நடவடிக்கை எடுப்பேன்.

(ii) பெறுபேறுகளை வெளியிடுவதில் மிகவும் துல்லியமான மற்றும் வெளிப்படையான செயல் முறையை நாங்கள் பின்பற்றுகிறோம் மற்றும் பின்வரும் வரிசையில் முடிவுகளை உறுதிசெய்து வெளியிடுகிறோம். இந்த விடயத்தில் மாணவர்களுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டால், அதுவும் கவனிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப இரண்டாவது முறையாக விடைத் தாள் பரிசோதனை செய்ய முடியும்.

பெறுபேறுகள் வழங்கும் ஒழுங்கு முறை

1. பெறுபேறுகள் கணக்கெடுப்புக்குப் பிறகு சம்பந்தப்பட்ட பாடத்தின் பொறுப்பான தலைமை விரிவுரையாளரைக் அவதானித்து பெறுபேறுகளை தரப்படுத்துதல்
2. அந்த முடிவுகளில் தொடர்புடைய பட்டப்பின் படிப்பு திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் (Coordinator) பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்
3. பாடத்துறை கல்வி சபை (Board of study) மூலம் மீண்டும் பரிசோதித்தல்
4. நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு பெறுபேறுகளை வெளியிடுதல் போன்றவை

இருப்பினும், அந்த வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்க்கப்படும் போது, அவரது / அவள் முதல் வினாத்தாள் ஒரு நிபுணரால் மதிப்பாய்வு செய்யப்படும். முடிவுகளின் மதிப்பீட்டை மதிப்பாய்வு செய்வது நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையிலும் தரநிலையின் படி செய்யப்படுகிறது. இருப்பினும், தேவையான ஆவணங்களை விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கீழ் கொண்டு வர உடனடி நடவடிக்கை எடுப்போம். எங்கள் நிறுவனத்தில் உள்ள அனைத்து பட்டப்பின் படிப்புகளும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரைகளின் பரீட்சித்தல் மற்றும் அங்கீகாரம் என்பன சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறையின் படி மேற்கொள்ளப்படுகிறது. இது ஆய்வுக் கட்டுரை மற்றும் அறிக்கையிடல் துறைக்கு தொடர்புடைய மூன்று தேர்வாளர்களால் மேற்பார்வையிடப்படுகிறது மற்றும் ஆய்வு குழுவின் தலைவரால் மேற்பார்வையிடப்படுகிறது. புலனாய்வாளர்கள் தேர்ந்தெடுக்க ஒரு வெளிப்படையான முறையைப் பயன்படுத்துகின்றனர். இந்த முறை நிர்வாக குழுவால் அங்கீகரிக்கப்பட்டு இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் செயற்படுத்தப்படுகிறது.

(III) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு உரிய விடைத்தாள் மதிப்பீட்டாளர்களால் செய்யப்படுகின்றன ஒரு குறிப்பிட்ட நடைமுறையின் படி புள்ளகிளை வழங்கல் மேற்கொள்ள முடியாது. விடைத்தாள் மதிப்பீட்டாளர்கள் மாணவர்களின் புள்ளிகளை (Statistic Analysis) ஆராய்ந்து அதற்கேற்ப தரவரிசைப்படுத்துகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கை, விடைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன, மதிப்பெண்கள் எவ்வாறு பரவுகின்றன என்பதன் அடிப்படையில் மதிப்பெண் முறை தீர்மானிக்கப்படுகிறது. இந்த நோக்கத்திற்காக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும், எதிர் காலத்தில் வெளிப்படைத்தன்மையுடன் ஒரு விசேட கணினி அடிப்படையிலான நவீன முறையை செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) விரிவுரைாளர் குழாம் மற்றும் மாணவர்களிடையே இரட்டை உறவு இருக்கிறதா என்பதை அறிய இரண்டு தொடர்புடைய படிவங்களை 18/03/2019 அன்று பேராதனை பல்கலைக்கழக நிர்வாக குழு அனுமதி அளித்தது. விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கே உரித்தான விண்ணப்பிக்க மாற்றியமைக்கப்பட்ட இரண்டு படிவங்கள், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் இரட்டை உறவு உள்ளதா என்பதை தீர்மானிக்க இந்த ஆண்டு முதல் பயன்படுத்தப்படும்.

படிவம் 1 (மாணவர்களால் நிரப்பப்பட வேண்டும்)

எதிர்காலத்தில், ஒவ்வொரு முறையும் புதிய மாணவர்கள் (M.Sc./ M.Phil. / Ph.D.) என பதிவு செய்யப்படும் போது, அவர் அல்லது அவர்களில் பலர் பூர்த்தி செய்த இந்த படிவத்தை விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்

படிவம் 2 (விரிவுரையாளர்களால் நிரப்பப்பட வேண்டும்)

விரிவுரையாளர்களால் நிரப்பப்பட்ட இப் படிவம் விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்

3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

அ விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் படிப்பு பாடநெறி களுக்காக அதன் விரிவுரையாளர்களின் சேவை முறையாக கிடைத்துள்ளதா என்பதை உறுதிப்படுத்த மாணவர் மதிப்பீட்டு படிவமொன்றை பெற்றுக் கொள்ள நடைமுறையொன்று 2016 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அவ்வப்போது விரிவுரையாளர்கள் மாணவர் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்ட போதும் அது நடைமுறையின் பிரகாரம் எமது நிறுவகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் அந்தந்த விரிவுரையாளர்களின் சேவை தொடர்பாக மாணவர்களிடமிருந்து முறையான நடைமுறையொன்று ஊடாக பெற்றுக்கொண்டு நிறுவகத்தில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ. விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்குரிய 11 விடைப் பத்திர மதிப்பீட்டுக் குழுக்கள் (Exam Evaluation Panel) என அந்தந்த பாடங்களுக்குரிய கல்விச் சபைகள் (Board of study) செயற்படுகின்றன.

விடைத்தாள்கள் அந்தந்த விரிவுரையாளர்களிடம் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த போதும் (மாணவர் சிக்கல்கள் காணப்படும் சந்தர்ப்பங்களில் எதிர்காலத்தில் அனைத்து விடைப் பத்திரங்களையும் இந் நிறுவகத்திலேயே பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இ விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட சேவைக் குறிப்பின் பிரகாரம், 05 சிரேஷ்ட நிலை பதவிகளில் (சிரேஷ்ட விரிவுரையாளர்) 02 பேர்

நிரப்பப்பட்டுள்ளனர், மீதமுள்ள 03 வெற்றிடங்கள் நிறுவனத்தின் தேவைக்கேற்ப நிரப்பப்படும். மேலும், சம்பந்தப்பட்ட ஒழுங்கு விசாரணை முடிக்கப்படாததால் உதவி நிதியாளர் சிரேஷ்ட நிதியாளர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்ப முடியாது. மேலும், உதவிப் பதிவாளர் / சிரேஷ்ட பதிவாளர் பதவிக்கான வெற்றிடங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஒரு உதவி பதிவாளர் நிரந்தர பதவியணிக்கு சொந்தமானதாகவும், (2013 பணியாளர் பதிவுக் குறிப்புகளின்படி நியமிக்கப்பட்டார்) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தில்லாததால் நிரப்பப்படவில்லை. தொழில்நுட்ப அலுவலர் (Internal) வெற்றிடத்தை நிரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆரம்ப தர பதவிகளில் இருந்து சாரதி பதவிக்கு மாற்றப்பட்டதன் அடிப்படையில் ஒருவரை நியமிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதற்கான பரிந்துரைகள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு ஏற்கனவே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு மின் மற்றும் அலுவலக இயந்திர எழுத்தர் பதவிகள் தேவையில்லை என்று தெரிவித்துள்ளது. முகாமைத்துவ உதவியாளர் (சிராப்பர்) பதவியில் உள்ள வெற்றிடங்களை இடமாற்ற அடிப்படையில் நிரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நிறுவனத்தில் இருக்கும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு என்பது நிர்வாக குழுவின் பரிந்துரை, அமைப்பின் தேவை மற்றும் செலவு அளவு ஆகியவற்றின் படி செய்யப்படுகிறது.

நிறுவனத்தின் பணியாளர்கள் பதிவேட்டில் மாற்றங்கள் தொடர்பாக 11.07.2018, 12.02.2019, 19.12.2019 மற்றும் 09.02.2020 திகதியிட்ட கடிதங்கள் மூலம் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பணியாளர் பதிவை சரி செய்ய தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன

ஈ கணக்காய்வில் சுட்டிக்காட்டிய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

உ 2018 செப்டம்பரில் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முகாமை சபைக் கூட்டத்தில் அறிவித்த படி, நிறுவனத்தின் புதிய கட்டிடம் ஒப்பந்தத்தின் படி 2018 ஒக்டோபர் இறுதிக்குள் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்தது. எனவே, மூன்று கட்டிடங்களுக்கும் பொருந்தும் வகையில் ஒரே நேரத்தில் ஒப்பந்தத்தை வழங்க திட்டமிடப்பட்ட போதும், புதிய கட்டிடத்தின் நிர்மாணம் ஒக்டோபர் 2018 இற்குள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மூன்று கட்டிடங்களுக்கும் (பிளாக் ஏ, பி, சி) விண்ணப்பிக்க கூறுவிலை எடுக்கப்பட்டதன் நோக்கம், துப்புரவு சேவையை ஒற்றை ஒப்பந்தமாகவும் புதிய கட்டிடமாகவும் வழங்குவதன் நிர்வாக நன்மையை கணக்கில் எடுத்துக் கொள்வதாகும். (பிளாக் சி) என்பது ஒரு செய்தித்தாள் விளம்பரத்தை மீண்டும் வைப்பதன் மூலம் துப்புரவு சேவையை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு நிதி பாதகத்தைத் தவிர்க்க வேண்டும். இருப்பினும், புதிய கட்டிடத்தின் நிர்மாணம் மேலும் தாமதமாகி விட்டதால், 31.10.2018 திகதியிட்ட தொழில்நுட்பக் குழு அதே காரணத்திற்காக கூறுவிலை கோருதற்கு பரிந்துரைக்க வேண்டியிருந்தது. இங்கே ஒரு எதிர்பாராத சூழ்நிலை இருந்தது. இருப்பினும், இதன் மூலம் நிறுவனத்திற்கு எந்த நிதி நட்டமும் ஏற்படுத்தவில்லை.

ஊ இரண்டு சாரதிகள் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் பணி புரிந்தனர், அவர்களில் ஒருவர் 04.12.2019 அன்று ஓய்வு பெற்றார். வெற்றிடத்தை நிரப்ப 03.02.2020 அன்று நடைபெற்ற நேர்முக பரீட்சையில் இருந்து இடமாற்றத்தின் அடிப்படையில் ஒரு சாரதி தெரிவு செய்யப்பட்டார். தொடர்புடைய பரிந்துரைகள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு 2019.09.07 திகதியிட்ட கடிதத்தின் மூலமாகவும், பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு 2019.12.09 திகதியிட்ட கடிதத்தின் மூலமாகவும் அவர் நியமனத்தை நிராகரித்ததாகவும், சம்பந்தப்பட்ட இடமாற்றத்தை இரத்து செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில், அனைத்து புதிய ஆட்சேர்ப்புகளையும் இரத்து செய்யுமாறு அரசாங்கம் அறிவுறுத்தியது. பல்கலைக்கழக மானிய ஆணையத்திடம் கோரப்பட்டதைத் தொடர்ந்து, எங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இடமாற்ற விண்ணப்பங்களைப் பயன்படுத்தி 03.02.2020 அன்று ஒரு நேர்முக பரீட்சை நடத்திய பின்னர் ஒரு சாரதி மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இதற்கிடையில், தேவையான நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய பரிந்துரைகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன. நாட்டின் தற்போதைய நிலைமையைப் பொறுத்தவரை, தேர்ந்தெடுக்கப்பட்ட சாரதி இதுவரை எங்கள் நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காக இணைக்கப்படவில்லை.

எ. நிறுவனத்தின் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்துடன். நிறுவனத்தின் 04 வாகனங்களின் குறைபாடுகள் மற்றும் பிற பரிசோதனைகள் இலங்கை போக்குவரத்து சபையின் அனுபவமிக்க உதவி நிர்வாக பொறியாளரால் மேற்கொள்ளப்படுகின்றன மற்றும் எரிபொருள் எரிவு சோதனை அவரால் மேற்கொள்ளப்படுகிறது (Est: Code: Chapter xxvii- 7:8 - முகாமைக் குழுவின் அனுமதியுடன் ஆகும்.

நிறுவனத்தின் பாடநெறிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட வெளிக் களப் பயணங்கள் மற்றும் குறுகிய கால பாடநெறிகளுக்கு தேவையான போக்குவரத்தை வழங்க இந்த பஸ் பயன்படுத்தப்படுகிறது, மேலும் அந்த சந்தர்ப்பங்களில் பஸ் ஏராளமான மாணவர்களை ஏர் கண்டிஷனிங் நிலைமைகளின் கீழ் கொண்டு செல்கிறது, சில சமயங்களில் போக்குவரத்து நெரிசல் காரணமாக. பயணங்களின் போது மிகவும் செங்குத்தான சரிவுகளுடன் (எ.கா. - அம்புலுவாவா) சிறிய விதிகளில் ஓட்ட வேண்டியிருப்பதால் இந்த நிலைமை ஏற்படலாம்.

மேலும், விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளரால் பயன்படுத்தப்படும் (CP-CEA -0317) இலக்க உத்தியோகபூர்வ வாகனம் பணிப்பாளரின் அன்றாட கடமைப் பயணங்களுக்கும், அவர் நெரிசலான வீதிகளில் கூடுதலான அளவில் பயணம் செய்வால் என்பதாலும் இந்த வேறுபாடு ஏற்பட்டு இருக்கலாம்.

இந் நிறுவனத்திற்குச் சொந்தமான வேன் 1996 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது மற்றும் அதன் தொடக்கத்திலிருந்து (சிறிய பழுதுபார்ப்புகளுடன்) குறுகிய பயணங்களுக்கு விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. (நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப வேனைப் பெறுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு கோரிக்கைகள் வைக்கப்பட்டுள்ள போதிலும், தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை எண்: 05/2019 இன் படி தொடர்புடைய நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சினால் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது).

மேற்கண்ட வேன் தினசரி நடவடிக்கைகளுக்கு பரவலாகப் பயன்படுத்தப்படுவதால், நிறுவனத்திற்குச் சொந்தமான கார் (301-6318) குறைாகவே பயன்படுத்தப்படுகிறது. இந்த நெரிசலான அவசர நேரங்களிலும், அதிக பட்ச நேரங்களிலும் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக இருக்கலாம் (எ.கா. ஞாயிற்றுக் கிழமைகளில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் செல்ல பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்பட்டது). இருப்பினும், நிலைமையை சரி செய்ய சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டது மற்றும் விலகல் ஏற்படும் போது அதற்கான காரணங்களை தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது.

ஏ கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளபடி 2019 ஆம் ஆண்டில் கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்படாத ஆராய்ச்சி திட்டங்களை (திட்ட இல 6142,6252,6259) விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட திட்டங்களுக்கு பொறுப்பான விரிவுரையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ ஆராய்ச்சி மானியங்களின் கீழ் கொள்வனவு செய்த உபகரணங்களை ஒரு தனி பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றது. தொடர்புடைய ஆய்வாளரிடமிருந்து ஒரு இருப்புச் சான்றிதழ் பெறப்படுகிறது. கணக்காய்வாளர் சுட்டிக்காட்டிய சொத்துக்கள் அடங்கிய ஆவணத்தின் நகலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆர்கன் கேஸ் சிலிண்டர் (Arrgun Gas cylinder) ஒரு சொத்து அல்ல. எனவே அது பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை

ஒ எதிர்காலத்தில் இயலளவு மேம்படுத்தப்பட்டு தரவினை களஞ்சியப்படுத்தக்4டிய 90 நாட்கள் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

ஓ. 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பொருட்களின் கணக்கெடுப்பு நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக கணக்கெடுப்பு சபையின் தலைவராக பேராதனை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட நிதியாளர் திரு.சானக ரோட்ரிகோ அவர்களும் அதில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரும் அதில் உறுப்பினராக இருந்தார். அவ்வாறே கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் பிரதி நிறுவகத்திடம் காணப்படுகின்றது.

ஓ. நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில்பணத்தை செலுத்தாத நபர்களுக்க சான்றிதழ் வழங்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஔ. ஆராய்ச்சி நிதியக் கணக்கின் மீதிகளைப் பயன்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

க். கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள படி தாமதக் கட்டணங்களின் கீழ் ரூபா 45,171.87 தொகை NIFS நிறுவனத்திற்கு நாம் வழங்கிய போக்குவரத்து வசதிகளுக்காக அறவிடப்பட வேண்டியதாகும். எவ்வாறாயினும், பட்டப்பின் படிப்பு நிறுவனத்திற்கு மாணவர்களைக் கொண்டு செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக என்றும், இதற்காக ஏதேனும் சலுகை வழங்கப்பட வேண்டும் என்றும் NIFS பணிப்பாளர் கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார். இது 28.04.2020 அன்று நடைபெற்ற 37 வது நிதிச் சபை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது, மேலும் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு மாணவர்கள் வசூலித்த பெஞ்ச் (bench Fee) கட்டணத்திலிருந்து

செலுத்த வேண்டிய தொகையை திருப்பிச் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய நிலுவைத் தொகையும் அறவிடப்பட்டுள்ளது.

க. கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தம் உள்ளிட்ட தவிர்க்க முடியாத காரணங்களால், எதிர்பார்த்த நேரத்திற்குள் ஆய்வை முடிக்க முடியவில்லை, மேலும் இது இரண்டாவது தவணை திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆரம்பிக்க முடியாததால் அதிக காலம் எடுத்தது. இதன் காரணமாக, அறவிடப்பட வேண்டிய கல்விக் கட்டணங்களை அறவிடுவதல் தாமதம் ஏற்பட்டது.. தற்போது அதிகளவான நிலுவைத் தொகை அறவிடப்பட்டுள்ளது. பாடநெறி நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாடநெறி ஒருங்கிணைப்பாளர்கள் தொடர்ந்தும் அறிவுறுத்தப்படுகின்றனர்.